மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணி வேகமாக நடைபெற்று, ஓரளவுக்கு முடிகின்ற தருவாயில் இருக்கிறது. ஆற்றுப் படுகையில் பில்லர் போட்டு, பைப் லைனை எடுத்துச் செல்ல வேண்டும். அதற்குரிய பணி இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தப் பணி நிறைவு பெறுகின்றபட்சத்தில், விரைவாக திருச்சி மாநகர மக்களுக்கு கொள்ளிடம் ஆற்றினுடைய பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

160—

கட்டட வசதி

***7489—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அளக்குடி ஊராட்சியில் குழந்தைகள் மையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அளக்குடி ஊராட்சியில் உள்ள குழந்தைகள் மையக் கட்டடம் வாடகையில்லாமல் சமுதாயக் கூடத்தில் செயல்பட்டு வருகிறது. அம்மையம் போதுமான இடவசதியுடன் நல்ல நிலையில் உள்ளதாலும், பள்ளிக்கு அருகில் உள்ளதாலும், குழந்தைகள் வந்து செல்ல வசதியாக இருப்பதாலும், அளக்குடி ஊராட்சியில் புதிய குழந்தைகள் மையக் கட்டடத்தைக் கட்டுவதற்கான தேவை தற்போது ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2012 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எல்லாரும் எல்லா வளமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை உருவாக வேண்டுமென்ற வரலாற்றுப் பொன்மொழிக்கேற்ப, இல்லாதோர் வாழ நித்தம், நித்தம் திட்டம் தந்து, தமிழகத்தை வளப்படுத்திடும் எங்கள் கற்பக விருட்சமே, தமிழக மக்களுக்காக அயராது உழைக்கும் எங்கள் அன்னையான, சமூக நலத் துறைமூலம் பல சரித்திரங்கள் தந்த சரித்திரத் தாயான மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்தில், அளக்குடி ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு 90—க்கும் மேற்பட்ட குழந்தைகள் வருகை தருகிறார்கள். அது மிகவும் பழமைவாய்ந்த வேளாண்மைத் துறை கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது. எனவே, தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே ஓர் அங்கன்வாடிக் கட்டடத்தை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அளக்குடி கிராமத்திற்காகக் கட்டப்பட்ட குழந்தைகள் மையம் அந்த ஊராட்சியைச் சேர்ந்த நாணல்படுகை என்ற கிராமத்தில் 5 கிலோ மீட்டர் தொலைவில் கட்டப்பட்டதால், அளக்குடியிலுள்ள குழந்தைகளால் அந்த மையத்திற்குச் செல்ல இயலவில்லை. எனவே, அளக்குடி மையம் வாடகை இல்லாமல் சமுதாயக்கூடக் கட்டடத்தில் தற்போது சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், தனியாகப் பிரித்து அங்கன்வாடிக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை

[2012 ஏப்ரல் 25

நிதியிலிருந்தும் கட்டிக்கொள்ள வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதனடிப்படையில், அளக்குடியில் நிச்சயமாகக் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஈரோடு கிழக்கு தொகுதி முழுமையாக மாநகராட்சியினுடைய நகரப் பகுதியிலே இருக்கின்ற காரணத்தினால், பல குழந்தைகள் மையங்கள் அங்கே வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. அங்கே அரசுப் புறம்போக்கு நிலங்கள் இல்லை. மாநகராட்சியினுடைய கட்டுப்பாட்டில் பல இடங்கள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த இடங்களிலே குழந்தைகள் மையத்தை அமைத்துத் தருவதற்கு முயற்சி எடுப்பார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—25

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும் சரி, புறம்போக்கு இடமாக இருந்தாலும் சரி அனுமதி தேவை. மாநகராட்சிக்குச் சொந்தமாக இருந்தால், ஆணையாளரிடத்திலே அனுமதி பெற வேண்டும். புறம்போக்கு இடமாக இருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே அனுமதி பெற வேண்டும். எங்கெங்கே காலி இடங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுத் தெரிவிப்பாரேயானால், சம்பந்தப்பட்ட ஆணையாளரிடமும், மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் பேசி, சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பெற்று அங்கன்வாடி மையம் கட்டித் தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: M.L.A. Constituency Development Fund—லிருந்து நிதி கொடுத்துவிடுங்கள் திரு. வி.சி. சந்திரகுமார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

2012 ஏப்ரல் 25]

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுடைய மேம்பாட்டிற்கு அங்கன்வாடிகள் மிக மிக அவசியம். அதே சமயத்தில் எண்ணற்ற கிராமங்களிலே பல அங்கன்வாடிகள் பழுதுபட்டிருக்கின்றன. வாடகைக் கட்டடத்திலே இயங்குகின்றன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து நாங்கள் நிதி ஒதுக்குகிறோம். ஆனால், ஓர் அங்கன்வாடிக் கட்டடத்திற்கு 6 இலட்சம் ரூபாய் மட்டுமே மதிப்பீடு செய்யப்படுகிறது. இந்த நிதியை வைத்து எந்த ஒப்பந்தக்காரர்களும் அந்தக் கட்டடத்தை முடித்துக் கொடுப்பதற்கோ, கட்டுவதற்கோ முன்வருவதில்லை. இதன் காரணமாக கடந்த ஆண்டு கொடுத்த நிதியும் அப்படியே இருக்கிறது. எனவே, மதிப்பீட்டை அதிகப்படுத்திக் கொடுப்பதற்கு நமது துறையின் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே கட்டப்படும் என்று சொல்லி, பல கட்டடங்கள் தமிழகத்திலே கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 6 இலட்சம் ரூபாய் என்று சொல்கிறார். ஆக, அளவு அதிகமாக இருக்க வேண்டும், இல்லை என்றால் அவர்கள் விருப்பப்படி கட்டியிருக்க வேண்டும். நாங்கள் குறிப்பிட்ட அளவு அங்கன்வாடிக் குழந்தைகளுக்கு மனிதநேயக் கழிப்பறை, அவர்கள் தங்கிப் படிப்பதற்கு, தூங்குவதற்கு என்று ஒரு குறிப்பிட்ட அளவு வைத்து, அந்த அளவிலே கட்டிக்கொள்ளக்கூடிய அளவிற்குத்தான் கட்டப்பட வேண்டும். அதற்குரிய மதிப்பு ரூ.4 இலட்சம். அந்த ரூ.4 இலட்சத்திலே தமிழ்நாட்டிலே பல இடங்களிலே கட்டப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த அடிப்படையிலே ரூ.6 இலட்சம் என்று குறிப்பிடுகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், பழுதுபார்ப்பதற்காக ரூ.47 கோடியே 61 இலட்சத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்து இன்றைக்கு அந்தப் பணம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஏதாவது ஒப்பந்தக்காரர்கள் வரவில்லை என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினரே ரூ.4 இலட்சத்திலே யார்

கட்டுவதற்கு சம்மதிக்கிறார்களோ அந்த ஒப்பந்தக்காரரை அழைத்து வந்து காட்டுவாரேயானால், நிச்சயமாக பொதுப் பணித் துறையின் மூலமாகக் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 161, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

161—

சொந்தக் கட்டடம்

***7253—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, குப்பநத்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள குப்பநத்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்ட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து 22—11—2011 அன்று நடைபெற்ற கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கான குழுக் கூட்டத்தில் ரூ.15 இலட்சம் கடன் வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள் இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 162, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.